# பெப்ரவரி - 13- திங்கள்
## புனித கத்தரின் தேரிச்சி
### எழிலின் நிறைவாம் சீயோனின்று ஒளிவீசி மிளிர்கின்றார் கடவுள். திபா. 50:2
-------------------------------------------------------------------

**முதல் வாசகம்: தொடக்க நூல் 4: 1-15, 25**

ஆதாம் தன் மனைவி ஏவாளோடு கூடி வாழ்ந்தான். அவள் கருத்தரித்துக் காயினைப் பெற்றுக் கடவுள் அருளால் ஓர் ஆண்மகனைப் பெற்றேன் என்றாள்.பின் அவனுடைய தம்பியாகிய
ஆபேலைப் பெற்றாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயினோ நிலத்தைப் பயிரிடுபவன் ஆனான். நீண்ட நாட்களுக்குப் பின் நிகழ்ந்ததாவது: காயின் தன் விளைச்சலின் பலனை ஆண்டவருக்குக் காணிக்கையாய்ச் செலுத்தினான். ஆபேலோ தன் மந்தையின் தலையீற்றுக்களில் மிகக் கொழுத்த ஆடுகளைக் காணிக்கையாய்க் கொடுத்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் ஏற்றுக் கொண்டார்.காயினையோ அவன் காணிக்கைகளையோ அவர் கண்ணோக்கவில்லை. அதனால் காயின் மிக்க சினம் கொண்டான். அவன் முகம் வாடியது. அப்போது ஆண்டவர் அவனை நோக்கி: நீ ஏன் கோபமாய் இருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்?நீ நன்மை செய்தால் உனக்கு வெகுமதி கிடைக்கும் தீமை செய்தால் உடனே பாவம் உன் வாயிலில் வந்து பதுங்கி நிற்குமன்றோ? அதன் ஆசை உன் மேல் இருக்கும் நீயோ அதை அடக்கிக் கொள்ள வேண்டும் என்றார். ஒருநாள் காயின் தன் தம்பி ஆபேலைப் பார்த்து: வெளியே போகலாம் வா என்றான். வயல்வெளியில் இருந்த போது காயின் தன் தம்பி ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்று விட்டான்.அப்பொழுது ஆண்டவர் காயினை நோக்கி உன் தம்பி ஆபேல் எங்கே என்று வினவ, அவன்: நான் அறியேன் என் தம்பிக்கு நான் என்ன காவலாளியா? என்றான். அதற்கு அவர்: உன் தம்பியின் இரத்தக் குரல் பூமியினின்று நம்மை நோக்கிக் கூக்குரலிடுகிறதே. நீ என்ன செய்தாய்? இதோ கேள் பூமி தன் வாயைத் திறந்து, உன் கையால் சிந்திய உன் தம்பியின் இரத்தத்தை உட்கொண்டது. ஆகவே, இன்று முதல் நீ அந்தப் பூமியில் சபிக்கப்பட்டவனாய் இருப்பாய்.அதனை நீ பயிரிட்டால் அது உனக்குப் பலன் தராது. பூமியில் நீ நிலையற்றவனும் நாடோடியுமாய் இருப்பாய் என்றார். அப்போது காயின் ஆண்டவரை நோக்கி, என் பாவம் மன்னிக்கப்படக் கூடுமானதன்று. அது அத்தனை பெரிது.இதோ, இந்நாட்டிலிருந்து என்னை இன்று துரத்தி விடுகிறீர். இனி நான் உம் கண்ணிற்கு மறைந்தவனாய்ப் பூமியில் நிலையற்றவனும் நாடோடியுமாய் இருப்பேன். அப்படியானால் என்னைக் காணும் எவனும் என்னைக் கொல்வானே என்றான். ஆண்டவர்: அப்படி நடக்கவே நடக்காது காயினைக் கொல்பவன் ஏழு மடங்கு பழியைச் சுமப்பான் என்று காயினுக்குச் சொல்லி, அவனைக் கண்டு பிடிப்பவன் எவனும் அவனைக் கொல்லாதபடிக்கு அவனுக்கு ஓர் அடையாளம் இட்டார்.மீண்டும் ஆதாம் தன் மனைவியோடு கூடிவாழவே, அவள் ஒரு மகனைப் பெற்றாள்: காயின் கொலை புரிந்த ஆபேலுக்குப் பதிலாகக் கடவுள் எனக்கு வேறொரு மகனைத் தந்தருளினார், என்று சொல்லி, அவள் அவனுக்குச் சேத் என்று பெயரிட்டாள்.

**பதில்பாடல்:** கடவுளுக்கு நன்றிப் பலி செலுத்துங்கள்

**நற்செய்தி: மாற்கு 8: 11– 13**

அக்காலத்தில் பரிசேயர் வந்து இயேசுவோடு தர்க்கிக்கத் தொடங்கி, வானிலிருந்து அருங்குறி ஒன்றைக் காட்டும்படி கேட்டு அவரைச் சோதித்தனர். அவர் பெருமூச்சுவிட்டு, ”இத்தலைமுறை அருங்குறி கேட்பானேன்? உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: இத்தலைமுறைக்கு அருங்குறி எதுவும் அளிக்கப்படாது” என்றார். அவர்களை விட்டுவிட்டு மீண்டும் படகேறி அக்கரைக்குச் சென்றார்.

**தியானம்:** இன்றைய நாள் தியானமானது பலியின் மேன்மையைப் பற்றி சிந்திக்க அழைக்கின்றது. பலியையை அல்ல இரக்கத்தையே தேடிவந்தேன் என்று கூறும் இறைமகன் இயேசு நாங்கள் கொடுக்கும் அப்பலியானது இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும். இல்லாவிடின் காயீனின் பலியை ஏற்றுக்கொள்ளாத இறைவன், எம்பலியையும் ஏற்றக்கொள்ள மறுத்துவிடுவார். ஏனென்றால் எமது பாவங்களுக்காக பலியாகி எங்களை மீட்டெடுத்த இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்தும்படியாக இறைவன் விரும்புகின்றார். ஆனால் இயேசு பத்துத் தொழுநோயாளர்களைக் குணப்படுத்தி அதில் ஒருவர் மட்டுமே வந்து நன்றி செலுத்தினார். அதே போன்று நாங்களோ எமக்குத் தேவையானது நிறைவேறிவிட்டாற் போதும் என்று (ஒருசிலரைத் தவிர) இறைவனுக்கு நன்றி சொல்ல மறந்து விடுகின்றோம். இறைமகன் இயேசுவை நினைவு கூர்ந்து தினமும் திருப்பலியில் அவரை உட்கொண்டு அவருக்கு நன்றி செலுத்த எமக்கு தனது உடலையும், இரத்தத்தையும் பலியாக்கினார்.ஆனால் அதை நாங்கள் நினைத்துப்பார்க்க நேரமில்லாதவர்களாக எடுத்ததற்கும் வேலை,வேலை என்று பணத்திற்கு அடிமையாகி, வாழும் வாழ்க்கையோ பாவவாழ்க்கையாக மாறிவிடுகின்றது. என்னைத் தேடுசகலதும் உன்னைத் தேடும் என்று இயேசு கூறுகின்றார். எனவே நாங்கள் உண்மையுடனும், தூய்மையுடனும் இயேசுவை உட்கொண்டு எமது வாழ்க்கையில் ஏற்பட்ட இன்ப துன்பங்கள் யாவும் அவர் அறிந்ததே, இதை உணர்ந்தவர்களாக எந்தநேரத்திலும், எந்த வேளையிலும் அனைத்திற்கும் நன்றி கூறுவோம்.